


போப்பாண்டவரை எப்படிக் கொல்லலாம்? ரம்ஸி யூசுஃப் யோசித்தான். ஒரு மனித வெடிகுண்டால் மட்டுமே அது சாத்தியம் என்று அவனுக்குத் தோன்றியது. ஒரு தற்கொலைப் படைப் போராளியைத் தேர்ந்தெடுப்பது. அவனுக்கு ஒரு வாரம், பத்து நாள் ஒழுங்காக பைபிள் க்ளாஸ் எடுப்பது. தாடியை நீக்கிவிட்டு, பாதிரியார்கள் அணியும் அங்கி ஒன்றை மாட்டிவிடுவது. சாந்த முகத்துடன் கையில் ஒரு பைபிளை எடுத்துக்கொண்டு, ஜபமாலை உருட்டியபடி போனால், போப் கலந்துகொள்ளும் கூட்டத்தில் அவனும் பங்குபெறத் தடையேதும் இருக்கப்போவதில்லை. (ஆசிய நாடுகளைச் சேர்ந்த பிஷப்கள் பங்குபெறும் மாநாடு ஒன்று, அப்போது பிலிப்பைன்ஸில் உள்ள மக்காதி நகரில் நடைபெறவிருந்தது.) எப்படியும் நூற்றுக்கணக்கான பாதிரியார்கள் அங்கே இருப்பார்கள். அவர்களுள் ஒருவனாகக் கலந்து காணாமல் போய்விடுவதிலும் பிரச்னை இருக்காது.

என்ன பிரச்னை என்றால், எப்படியாவது அந்தக் கூட்டத்தில் நகர்ந்து முன்னேறி, போப்பின் அருகே போய்விடவேண்டும். அவரது பாதம் பணிந்து வணங்குகிற பாவனையில், இடுப்பில் ஒளித்து எடுத்துச் சென்றிருக்கும் குண்டை வெடிக்கச் செய்துவிட வேண்டும்.

ராஜிவ் காந்தி படுகொலைக்குக் கையாளப்பட்ட அதே உத்திதான். குறி பிசகாத அந்தத் தாக்குதல் உத்திதான், போப்பைக் கொல்லவும் பயன்படும் என்று ரம்ஸி யூசுஃப் நினைத்தான்.

போப்பாண்டவர் படுகொலைத் திட்டம் என்பது யூசுஃப் செய்ய உத்தேசித்திருந்த அடுத்த பெரிய காரியத்துக்கு மிக மிக அத்தியாவசியமானது. போப் படுகொலைத் திட்டத்தை ஒரு திசைதிருப்பும் நடவடிக்கையாகப் பயன்படுத்துவது. காவல் துறையும் ஈரேழு பதினாலு உலகமும் அது குறித்தே யோசித்துக்கொண்டும் கவலைப்பட்டுக்கொண்டும் இருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, குறிப்பிட்ட சில அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானங்களைத் தகர்த்துவிடுவது.

ரொம்ப நாள் இடைவெளியெல்லாம் இல்லை. வெறும் ஆறே நாட்கள். போப் வரப்போவது ஜனவரி 15, 1995. அமெரிக்க விமானங்களைத் தகர்க்கத் தீர்மானித்திருந்த தினம் ஜனவரி 21.

இது விஷயத்தில், காலித் ஷேக் முகம்மது மூலம் அல் காயிதா மேலிடத்திலிருந்து மிகத் தெளிவான உத்தரவுகள் அவனுக்கு வந்திருந்தன. போப் கொலைத் திட்டம் ஒன்றைத்தான், ரம்ஸி யூசுஃப் தன் இஷ்டத்துக்குத் திட்டமிடலாம். விமானத் தகர்ப்பு ப்ராஜக்டுக்கான கட்டளைகளும் ஆட்களும் அல் காயிதாவிடமிருந்தே வரும். தேதி உள்பட அல் காயிதா நிர்ணயித்ததுதான். அதற்கு வசதியாகத்தான் போப் படுகொலைத் திட்டத்துக்கு ஜனவரி 15-ம் தேதியை யூசுஃப் தேர்ந்தெடுத்திருந்தான்.

விமானத் தகர்ப்புத் திட்டம் ரொம்பப் பெரிய காரியம். ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட அமெரிக்கப் பயணியர் விமானங்களைக் குண்டுவைத்துத் தகர்ப்பது. எப்படிச் செய்யலாம்?

திட்டத்தைப் பாருங்கள். அல் காயிதா தேர்ந்தெடுத்துத் தந்திருந்தவை மொத்தம் பதினொரு விமானங்கள். அத்தனையும் அமெரிக்கன் ஏர்லைன்ஸுக்குச் சொந்தமானவை. ஆனால், பிலிப்பைன்ஸிலிருந்து நேரே அமெரிக்காவுக்குப் போகாமல் பல்வேறு கிழக்காசிய நாடுகளில் இறங்கிச் செல்பவை. கிட்டத்தட்ட டவுன் பஸ் சர்வீஸ் மாதிரி.

நேராக அமெரிக்கா போகும் விமானங்கள் என்றால், குண்டு வைக்கப் போகிறவர்களுக்கு அமெரிக்க விசா இருந்தாக வேண்டும். இல்லாவிட்டால் படியேற விடமாட்டார்கள். ஆனால், பிலிப்பைன்ஸிலிருந்து தாய்லாந்து வழியாகவோ, மலேசியா வழியாகவோ, சிங்கப்பூர் வழியாகவோ போகிற விமானங்கள் தானே? அந்த ஊருக்கு டிக்கெட் வாங்குவதில் ஒரு பிரச்னையும் இல்லையே?

ஆக, பதினொரு விமானங்கள். பதினொரு தீவிரவாதிகள். எதற்கும் இருக்கட்டும் என்று பேக்-அப்புக்கு இன்னும் ஒன்பது பேர். இவர்களுள் ஐந்து பேர் அல் காயிதாக்காரர்கள். சூடானிலிருந்து ஒசாமா பின்லேடனால் நேரடியாக அனுப்பப்பட்டவர்கள். மீதி ஆசாமிகள் அத்தனை பேரும் ரம்ஸி யூசுஃபால் தேர்ந்தெடுக்கப்பட்ட கொஞ்சம் பாகிஸ்தான், கொஞ்சம் ஆப்கனிஸ்தான், கொஞ்சம் பிலிப்பைன்ஸ்காரர்கள்.

இவர்கள் அத்தனை பேருக்கும் ரம்ஸி யூசுஃப், மணிலாவுக்கு வெளியே ஒரு காட்டுப்பகுதியில் வைத்துப் பயிற்சியளித்தான். ஆளுக்கு ஒரு விமானத்தில் ஏறவேண்டியது. பயணிகளின் அவசரகால பாதுகாப்புக்காக சீட்டுகளுக்கு அடியில் வைக்கப்பட்டிருக்கும் லைஃப் ஜாக்கெட்டுகளுக்குள் (Life jackets) குண்டை ஒளித்துவைத்துவிட்டு இறங்கிவிட வேண்டியது. அத்தனை பேரும் இறங்கிய சூட்டில், ஏற்கெனவே தயாராக வாங்கிவைத்திருக்கும் பாகிஸ்தான் விமான டிக்கெட் துணையுடன் கராச்சிக்கோ, இஸ்லாமாபாத்துக்கோ போய்விட வேண்டியது.

மிகக் கவனமாக பாகிஸ்தான் போகிற விமானங்கள் புறப்படும் நேரத்தைக் கணக்கிட்டு, அதற்குச் சற்று முன்னதாகப் புறப்படும் அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானங்களையே குண்டு வைக்கத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். 21-ம் தேதி காலை ஒன்பது மணியிலிருந்து மறுநாள் அதிகாலை நான்கு மணிவரை வெவ்வேறு நேரங்களில் புறப்படவிருந்த வெவ்வேறு விமானங்கள்.

பஸ்ஸில் ஏறி இறங்குவது மாதிரியெல்லாம் ஒரு விமானத்துக்குள் ஏறி இறங்கமுடியுமா, என்றால் முடியும். அததற்கு உரிய நபர்களைத் தகுந்தபடி கவனித்துக்கொண்டால், சாத்தியம்தான் என்று ரம்ஸி யூசுஃப் நினைத்தான். இந்தத் திட்டம் மட்டும் வெற்றிகரமாக நடந்துவிடுமானால், ஒரே நாளில் பசிபிக் பெருங்கடலில் பதினொரு அமெரிக்க விமானங்கள் வெடித்து விழும். குறைந்தது ஐயாயிரம் பேராவது இறப்பார்கள். உலகின் எந்த மூலையிலும் அடுத்த சில மாதங்களுக்கு யாரும் விமானம் ஏறவே யோசிப்பார்கள்.

இப்படியெல்லாம் யோசித்துத் திட்டமிட்டு, ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்தான் ரம்ஸி யூசுஃப்.

மைக்ரோபாம் என்று அழைக்கப்படும் வஸ்து அது. சின்ன சைஸ் டென்னிஸ் பால் அளவுக்குத்தான் இருக்கும். அதனுடன் ஒரு சிறிய கேஸியோ கடிகாரம் இணைக்கப்பட்டது. நேரத்தை நிர்ணயித்து பொத்தானை அழுத்திவைத்துவிட்டால், சமர்த்தாகச் சப்தமில்லாமல் அது பாட்டுக்குக் கிடக்கும். சினிமா குண்டுகள் மாதிரி டிக் டிக் என்று சப்தம் போட்டுக் காட்டிக்கொடுக்காது. குண்டும் கூட பயங்கரமாகவெல்லாம் இருக்காது. மேல் பார்வைக்கு நிஜமாவே பந்துபோலத்தான் தெரியும். அதனுள்ளே நைட்ரோ க்ளிசிரின் என்கிற வேதிப்பொருள் ஒன்று, வெடிமருந்தாக இருக்கும். சட்னி, சாம்பார் மாதிரி கொஞ்சம் நைட்ரேட் மற்றும் சல்ஃபூரிக் ஆசிட் கலந்திருக்கும். கூடுதல் காத்திரத்துக்கு நைட்ரோபென்ஸைன், சில்வர் அஜைட் (இந்த அஜைட் என்றால் என்னவென்று ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். மறந்திருந்தால் பழைய இதழ்களைப்

புரட்டவும்.) என்று இன்னும் இரண்டு வேதிப் பொருள்கள். இந்த குண்டை வெடிக்கச் செய்வதற்கு, சிறிய, ஒன்பது வோல்ட் பேட்டரிகள் இரண்டு.

மொத்தமாக எல்லாவற்றையும் ஒரு கோபால் பல்பொடி பாக்கெட்டுக்குள் திணித்துவிடமுடியும்.

ரம்ஸி யூசுஃப் தனிப்பட திட்டமிட்டிருந்தால், இம்மாதிரியான ஹைடெக் குண்டு குறித்தெல்லாம் அவன் கற்பனை கூடச் செய்திருக்கமுடியாது. அங்கேதான் அல் காயிதா வருகிறது. அமெரிக்கத் தயாரிப்பான அந்த குண்டுகளை, அமெரிக்கக் கப்பல் மூலமே பிலிப்பைன்ஸுக்குக் கொண்டுவரச் செய்து, அங்கே உத்தியோகம் பார்க்கும் உத்தமோத்தமர்களான ஆபீஸர்கள் மூலமே ரம்ஸி யூசுஃபிடம் பத்திரமாகக் கொண்டுவந்து சேர்த்துவிட்டார்கள்.

அதுமட்டுமல்லாமல், விமான விளையாட்டிலேயே இன்னொரு உச்சகட்டம் இருந்தால், நன்றாக இருக்கும் என்று நினைத்து, ரம்ஸி யூசுஃபே எதிர்பார்த்திருக்க முடியாத ஒரு புதிய திட்டத்தை இணைத்தார்கள்.

அந்தத் திட்டத்துக்குப் பெயர், சி.ஐ.ஏ.வுக்கு சம்மட்டியடி.

நன்றாக விமானம் ஓட்டத்தெரிந்த ஒரு நபரைத் தேர்ந்தெடுப்பது. அவன் ஒரு சிறு விமானத்தை (இந்த விமானத்துக்கு Cessna என்று பெயர். இரண்டு பேர் மட்டுமே பயணம் செய்யமுடியும். குண்டு போடுவதற்காகவே வடிவமைக்கப்பட்ட விமானம்.) வாடகைக்கு எடுப்பது. அல்லது விலைக்கு வாங்குவது. அல்லது கடத்தியே விடுவது.

அந்த விமானம் கொள்ளும் அளவுக்கு வெடிமருந்தை நிரப்பிக்கொண்டு நேரே அமெரிக்காவின் விர்ஜீனியா மாகாணத்தில் உள்ள சி.ஐ.ஏ.வின் தலைமையகத்தின் மீது போய் மோதி வெடித்துவிடுவது.

இந்தத் திட்டத்துக்கு அப்துல் ஹக்கீம் முராத் என்கிற போராளியை அல் காயிதா தேர்ந்தெடுத்தது. அகமது சயீத் என்கிற இன்னொரு பெயரும் இவனுக்கு உண்டு. குவைத்தில் ஒரு பெட்ரோலிய நிறுவனத்தில் க்ரேன் ஆபரேட்டராக உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்த ஒரு சாது தகப்பனாருக்குப் பிறந்தவன் இவன். அடிப்படையில் பாகிஸ்தானி. தந்தையின் உத்தியோக நிமித்தம்தான் இவனது குடும்பம் குவைத்துக்குக் குடிபெயர்ந்தது.

முராத்துக்குச் சிறு வயதிலிருந்தே விமானம் ஓட்டுவதில் ஆசை. நாலைந்து விமானப் பயிற்சிப் பள்ளிகளில் படித்திருக்கிறான். 275 மணிநேரம் விமானம் ஓட்டி, ஒருமாதிரி நல்ல பைலட் என்று பெயர் வாங்கியபிறகு, அவனுக்கு கமர்ஷியல் பைலட் லைசென்ஸ் கிடைத்தது. சமர்த்தாக விமானம் ஓட்டிக்கொண்டிருந்திருக்கலாம். எப்படியோ ரம்ஸி யூசுஃபின் நட்பு கிடைத்து, முராத்தும் ஒரு தீவிரவாதி ஆகிப்போனான். அவனை ரம்ஸி யூசுஃப் பாகிஸ்தானுக்கு அழைத்துப் போய் லாகூரில் ஒரு ஹோட்டல் அறையில் தங்கவைத்து, எப்படி வெடிகுண்டு தயாரிப்பது என்றெல்லாம் கற்றுக்கொடுத்திருக்கிறான். (பின்னால் முராத் மாட்டிக்கொண்டபிறகு, விசாரணையில் தெரியவந்த தகவல்கள் இவை.)

தனது ஆள்பலம் குறித்து ரம்ஸி யூசுஃப் அல் காயிதா மேலிடத்துக்கு அனுப்பிய தகவல்களின் அடிப்படையில், முராத் தான் தற்கொலைப் போராளியாக சி.ஐ.ஏ. கட்டடத்தைத் தகர்ப்பதற்குச் சரியான ஆள் என்று அல் காயிதா தேர்ந்தெடுத்தது. முன்னதாக, யூசுஃபின் விமானத் தகர்ப்புத் திட்டத்தில்தான் முராத்தின் பெயர் இருந்தது. ஒன்றல்ல, இரண்டு விமானங்களில் ஏறி குண்டு வைத்துவிட்டு இறங்க இருந்தவன் அவன். திட்டத்தை மாற்றி, அவனுக்கு இன்னும் சில சிறப்புப் பயிற்சிகள் அளித்து, விர்ஜீனியாவுக்கு அனுப்பிவிட அல் காயிதா உத்தேசித்திருந்தது.

அத்தனை திட்டங்களும் தயார். ஆட்கள் தயார். ஆயுதங்கள் தயார். பயிற்சி அளிக்கப்பட்டுவிட்டது. இனி என்ன? களமிறங்கவேண்டியதுதான் பாக்கி என்கிற சூழ்நிலையில்தான், ரம்ஸி யூசுஃபின் இம்மாபெரும் திட்டங்கள் தவிடுபொடியாயின. அதுவும் வேறு யாராலோ அல்ல. அவனாலேயே. அல்லது அவர்களாலேயே.

ஒரு த்ரில்லர் திரைப்படத்தைக் காட்டிலும் விறுவிறுப்பான சம்பவங்களைக் கொண்ட அந்த தினம், ஜனவரி 6, 1995.

மணிலா நகரில் உள்ள ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பு அது. பெயர் டோனா ஜோஸ்ஃபா (Dona Josefa). ஓரளவு வசதியானவர்கள் வாழும் பகுதியில் உள்ள கட்டடம் என்பதால், பாதுகாப்புப் பிரச்னையெல்லாம் அங்கே கிடையாது. ஆனால், அந்தக் குறிப்பிட்ட தினத்தன்று ராத்திரி சரியாகப் பதினொரு மணிக்கு, அந்தக் கட்டடத்தின் ஆறாவது தளத்தில் உள்ள 603 கதவிலக்கம் கொண்ட அபார்ட்மெண்டுக்குள்ளிருந்து ஒருமாதிரி லேசாகப் புகை வர ஆரம்பித்தது.

ராத்திரி வேளை என்பதால், முதலில் யாரும் கவனிக்கவில்லை. நேரம் ஆக ஆக, அந்தப் புகை எழுப்பிய வாசனை சகிக்கமுடியாமலிருந்தது. எதைக் கொளுத்தினால் அப்படியொரு துர்நாற்றம் வரும் என்றே யாருக்கும் தெரியவில்லை. ஆனால், அங்கே என்னமோ அசம்பாவிதம் என்பது மட்டும் புரிந்தது. உரக்கக் கூப்பிட்டுப் பார்த்தார்கள். மேலே போய்க் கதவைத் தட்ட பயம். ஆகவே, தீயணைப்புத் துறைக்குத் தகவல் தெரிவித்துவிட்டு, எதற்கும் இருக்கட்டும் என்று போலீஸுக்கும் சொல்லியனுப்பினார்கள்.

தீயணைப்பு வீரர்கள் வந்தார்கள். போலீஸும் வந்தது.

எடித் குரேரா (Edith Guerrera) என்கிற அந்தக் கட்டடத்தின் சொந்தக்காரர், கண்ணீரும் கம்பலையுமாக ஓடோடிச் சென்று, "என்னவென்று தெரியவில்லை, ஏதாவது செய்து என் கட்டடத்தைக் காப்பாற்றுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

"உள்ளே யார் குடியிருக்கிறார்கள்?"

"கொஞ்சகாலமாகத்தான்.. யாரோ வெளிநாட்டுக்காரர்கள்."

"வெளிநாடென்றால்?"

"அது தெரியவில்லை. பாகிஸ்தானோ, ஆப்கனிஸ்தானோ.. ஆனால், ஒழுங்காக அட்வான்ஸ், வாடகை கொடுத்திருக்கிறார்கள்."

போலீஸ்காரர்கள் யோசித்தார்கள். சரி, மேலே போய்ப் பார்த்துவிடலாம் என்று முடிவு செய்து, தீயணைப்பு க்ரேன் மூலமாகவே அந்தக் குறிப்பிட்ட தளத்தை அடைய முடிவு செய்து, அதற்கான ஆயத்தத்தை மேற்கொண்டார்கள்.

அப்போதுதான் அந்த வீட்டின் ஜன்னல் திறந்து ஒரு தலை எட்டிப் பார்த்தது.